# இலங்கையில் மாற்றுக்கருத்துக்களுக்கு எதிரான அடக்குமுறை

**ஓகஸ்ட் 2014**



கொழும்பில் ஓகஸ்ட் 14 அன்று காணாமல் போனோரின் குடும்பங்கள் பங்குபற்றிய கூட்டத்திற்குள் புகுந்த பௌத்த மதகுருமார்களின் தலைமையிலான கும்பல், காணாமல் போனோரின் குடும்பங்களை நோக்கி வெறுக்கத்தக்க சுலோகங்களைக்கூறிக்கத்தியதுடன், ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களையும் சுமத்தியது. அத்துடன் அச்சுறுத்தும் வகையிலும் நடந்து கொண்டது .(© Melani Manel Perera)


INFORM Human Rights Documentation Centre

www.ihrdc.wordpress.com informcolombo@gmail.com

## உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்


அ. அரசாங்கத்தை விமர்சித்துள்ளவர்களதும், சவால்விடுத்துள்ளவர்களினதும் அத்துடன் விமர்சிக்கக்கூடியவர்களதும், சவால்விடுக்கக்கூடியவர்களதும் மீது மரண அச்சுறுத்தல்கள், தொந்தரவு, பயமுறுத்தல் மற்றும் கட்டுப்பாடுகள்

ஆ. மனித உரிமைக் காப்பாளர்களை விசாரணை செய்தல்

இ. பேச்சுச் சுதந்திரத்தின் மீறல்கள்

ஈ. ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தை மீறுதல்

உ. ஒன்று சேர்வதற்கான சுதந்திரத்தை மீறுதல் (அரச சார்பற்ற நிறுவனங்கள் [NGO] மீது பயமுறுத்தலும், கட்டுப்பாடுகளும்)

ஊ. மாணவச் செயற்பாட்டாளர்களை அடக்குதல்

எ. எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகளுக்கு எதிரான அடக்குமுறை


*இலங்கையின் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தவும் கண்காணிக்கவும் 1990 இன்ஃபோர்ம் INFORM நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. குறிப்பாக இன மோதல்களும் போரும் நிலவிய சூழலிலேயே இது உருவாக்கப்பட்டது. உள்ளூர், தேசிய, சர்வதேச மட்டங்களில் எழுத்துமூலமும் வாய்மொழி மூலமும் இடையீடுகளை மேற்கொள்வதிலும், அறிக்கைகளை வெளியிடுவதிலும், அது தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. படிப்படியாகவும் அடிக்கடியும் உரிமைகள் மீறப்படுகின்ற சமூகங்களை மையப்படுத்தி செயற்படுவதிலும் இன்ஃபோர்ம் தன்னை அர்ப்பணித்தது. தற்போது தேர்தல்களைக் கண்காணிப்பதிலும் கருத்துச் சுதந்திரத்திற்காகச் செயற்படுவதிலும் மனித உரிமைகள் காப்பாளர்களை மையப்படுத்தியும் இன்ஃபோர்ம் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது. இலங்கையில் கொழும்பை அடிப்படையாகக் கொண்டு இன்ஃபோர்ம் இயங்கி வருவதோடு, உள்ளூர் செயற்பாட்டாளர்கள், குழுக்கள் வலைப்பின்னல்களுடனும், பிராந்திய (ஆசிய) சர்வதேச மனித உரிமைகள் வலைப்பின்னல்களுடனும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது.*

## சாராம்சம்:

கட்டாயப்படுத்தப்பட்ட காணாமல் போதல்களினால் பாதிக்கப்பட்டவர்களின் சர்வதேசத் தினம் ஓகஸ்ட் 30 ஆகும். ஆனால், அது இலங்கையில், காணாமல் போனவர்களின் குடும்பத்தினரும், அவர்களுக்கு ஆதரவளித்தவர்களும் பௌத்த மதகுருமார்களின் தலைமையிலான கும்பல்களினாலும், பொலிசாரினாலும் மற்றும் அரசாங்க ஊடகங்களினாலும் அச்சுறுத்தல்களுக்கும், பயமுறுத்தல்களுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் அத்துடன் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களுக்கும் முகம்கொடுத்த ஒரு மாதமாக விளங்கியது. வடக்கு நகரமான வவுனியாவில் கட்டாயப்படுத்தப்பட்ட காணாமல் போதல்களினால் பாதிக்கப்பட்டவர்களின் சர்வதேச தினமன்று, அமைதியான பேரணியொன்றைப் பொலிசார் தடைசெய்தனர். மன்னாரில் காணாமல் போன தமிழ் குடும்பங்கள் அச்சுறுத்தப்பட்டதுடன், காணாமல் போனோர் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் அவர்கள் சாட்சியமளிக்கக்கூடாது என வலியுறுத்தப்பட்டனர். ஓகஸ்ட் மாதத்தின் ஆரம்பத்தில், கொழும்பில் தேவாலயமொன்றினால் நிருவகிக்கப்படும் நிலையமொன்றில்(CSR) காணாமல் போனவர்களின் குடும்பங்களின் தனிப்பட்ட கூட்டமொன்றினுள், பௌத்த மதகுரு ஒருவரின் தலைமையிலான கும்பல் நுழைந்தது. பொலிசாரை கூட்ட ஏற்பாட்டாளர்கள் அழைத்தனர். ஆனால், பொலிசார் கூட்டத்தினதும், பங்கெடுப்பாளர்களினதும் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்க மறுத்ததுடன், கூட்டம் நிறுத்தப்பட்டு, வடக்கிலிருந்து வந்த பங்கெடுப்பாளர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட வேண்டும் என நிர்ப்பந்தித்தனர். ஆரம்பத்தில், கும்பலைக் கலைக்க பொலிசார் மறுத்ததுடன், அமைப்பாளர்களினதும், பங்கெடுப்பாளர்களினதும் பலமான வற்புறுத்தலின் பேரில் மட்டுமே அவ்வாறு செய்தனர். இந் நிகழ்ச்சியானது ஒரு சங்கிலியிலான சம்பவங்களுக்கு இட்டுச் சென்றது. பயங்கரவாதத்திற்கு அவர்கள் தொடர்பினைக் கொண்டுள்ளார்கள் என்பது உட்பட ஏற்பாட்டாளர்களுக்கும், பங்கெடுப்பாளர்களுக்கும் எதிரான பலதரப்பட்ட ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை சிங்களச் செய்திப்பத்திரிகைகளும்,மேற்படி கும்பலும் சுமத்தின. அங்கு பிரசன்னமாகியிருந்த மனித உரிமைக் காப்பாளர்களில் ஒருவரான வண.பிதா சக்திவேல் ஒரு தொடரிலான அச்சுறுத்தும் சம்பவங்களுக்கு முகங்கொடுத்தார். இத்தகைய நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவது பற்றி இராஜதந்திரிகளை வெளிவிவகார அமைச்சு எச்சரித்திருந்தது. ஆனால், அது பௌத்த மதகுருக்கள் தலைமையிலான கும்பலினால் கூட்டம் குழப்பப்பட்டதைக் கண்டிக்கவில்லை

2014 ஜூனில் முஸ்லிம் எதிர்ப்புக் கலகங்களின் சந்தேக நபர்களை பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவர் விடுவிப்பதற்கு மறுத்தார். அத்துடன், அரசாங்க அரசியல்வாதியொருவருக்கு எதிராக வழக்கொன்றைத் தாக்கல் செய்த பாடசாலை பெண் ஆசிரியர் ஒருவர் மரண அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்தார். மனித உரிமைகள் இயக்கங்களில் முன்னணியாக விளங்கிய வடக்கைச் சேர்ந்த தமிழ் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் தன்னைக் கண்காணிப்பதாகவும், அச்சுறுத்துவதாகவும் முறைப்பாடு செய்தார். பேச்சுச் சுதந்திரம் தொடர்ந்தும் மீறப்பட்டது. வவுனியாவில் தமிழ் இதழியலாளர் ஒருவருக்கு மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதுடன், யாழ்ப்பாணம் பத்திரிகைக் கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் பொலிசாரினால் விசாரிக்கப்பட்டார் அத்துடன், அவர் சிங்களச் செய்திப்பத்திரிகையினால் எல்.ரி.ரி.ஈ.இன் அங்கமொன்றாக இருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டார். யுத்தத்திற்குப் பிந்திய முன்னேற்றங்கள் மீது சர்வதேச கருத்தரங்மொன்றில் கலந்துகொண்ட, இந்தியக் கல்வியியல் செயற்பாட்டாளர் ஒருவர் கருத்தரங்கிற்கு முன் கிழக்கு மாகாணத்திற்குச் செல்வதற்கு முயன்ற போது, விசாரிக்கப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டார். "சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் - அத்துடன் பௌத்திற்கு எதிரான ஜிகாத்கள்" என்றவாறு முஸ்லிம் இதழியலாளர்கள் நாமம் சூட்டப்பட்டதாகச் செய்திகள் கூறின. ஜூன் முதல் தனது 'விசா' தாமதித்து வைக்கப்பட்டுள்ளதாக நியூயோர்க் ரைம்ஸ் நிருபர் ஒருவர் முறைப்பாடு செய்தார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது, நீதிமன்ற விசாரணையையிட்டு செய்தி சேகரிக்கச் சென்ற இதழியலாளர்கள் தடுக்கப்பட்டனர். கொழும்பில் பாடசாலையொன்றில் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டதற்காக விசாரணையொன்றுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஒன்று கூடுவதற்கும், பங்கெடுப்பதற்குமான சுதந்திரம் தாக்குதலின் கீழ் இருந்தது. சமயங்களுக்கிடையிலான நான்கு நல்லிணக்க நிகழ்ச்சிகள் கண்காணிப்புக்கு உட்பட்டிருந்ததாக தேசிய சமாதானப் பேரவை அறிக்கையிட்டிருந்தது. தென் மற்றும் மத்திய மாகாணங்களில் தேசிய சமாதானப் பேரவையின் இரு நிகழ்ச்சிகள் பொலிசாரினால் கண்காணிப்புக்கு உட்பட்டிருந்ததுடன், கிழக்கில் இரு நிகழ்ச்சிகள் இராணுவத்தினால் கண்காணிப்புக்கு உட்பட்டிருந்தன. தொழிற்சங்கக் கூட்டங்களும், செயற்பாடுகளும் தடைகளுக்கு முகங்கொடுத்தன. பாதுகாப்புக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் பயமுறுத்தலொன்றை முன்வைப்பதாகவும், மன்றங்களையும், இலாபமீட்டாத தாபனங்களையும்

கண்காணிப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் புதிய சட்டங்கள் கொண்டு வரப்படுவதாகவும் சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இரு பல்கலைக்கழகங்களில் மாணவ செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டு, இடைநிறுத்தப்பட்டனர். பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டங்களின் கீழ் இரு தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டதற்கும், தடுத்து வைக்கப்பட்டதற்கும் (கும்பலொன்றினால் தாக்கப்பட்டு, காயமடைந்த பின்னர் ஒருவர் கைது செய்யப்பட்டார்) எதிராக மாணவ செயற்பாட்டாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்த போது, இனவாதத்தைத் தூண்டுவதாக பிரதான மாணவர் சங்கத்தினை உயர் கல்வி அமைச்சர் குற்றஞ்சாட்டினார். ஊவா மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் எதிர்தரப்பு அரசியல் கட்சிகள் தொடர்ச்சியானதும், முறைமையானதுமான அச்சுறுத்தல்களுக்கும், தாக்குதல்களுக்கும் முகங்கொடுத்தன.

ஒரு தொகையிலான சம்பவங்களில் கருத்து வேறுபாட்டினை அடக்குவதில் பொலிசாரும், இராணுவத்தினரும் அத்துடன் அரசாங்க அரசியல்வாதிகளும் நேரடியான பொறுப்பினைக் கொண்டிருந்ததாகத் தோன்றுகின்றது. அரசாங்கச் சார்பற்ற கட்சிகளினால் கருத்து வேறுபாடு நசுக்கப்பட்ட போது, சட்டத்தை அமுல்படுத்துவதை விட குற்றமிழைத்தவர்களுக்கு பொலிசார் ஆதரவாக விளங்கியதாகத் தோன்றுகின்றது.

## அ. அரசாங்கத்தை விமர்சித்துள்ளவர்களதும், சவால்விடுத்துள்ளவர்களினதும் அத்துடன் விமர்சிக்கக்கூடியவர்களதும், சவால்விடுக்கக்கூடியவர்களதும் மீது மரண அச்சுறுத்தல்கள், தொந்தரவு, பயமுறுத்தல் மற்றும் கட்டுப்பாடுகள்

### 1. அரசாங்க அரசியல்வாதியொருவருக்கு எதிராக வழக்கொன்றைத் தாக்கல் செய்த ஆசிரியர் ஒருவருக்கு மரண அச்சுறுத்தல்



**தனக்குக் கிடைத்த மரண அச்சுறுத்தல் கடிதத்தை நவகத்தேகம நவோதய வித்தியாலயத்தின் ஆசிரியர் ஒருவரான சுசீலா ஹேரத் காட்டுகின்றார்** (Photo: Ada Derana)

தன்னைப்பாலியல்வல்லுறுவுக்குட்படுத்தி, கொலை செய்வதாகப் பயமுறுத்தி கடிதமொன்று 2014 ஓகஸ்ட் 5 இல் தனக்குக் கிடைத்துள்ளதாக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சரத் குமாரவுக்கு (ஆளும் கட்சியைச்சேர்ந்த - ஐக்கிய பொதுசன சுதந்திர முன்னணி - ஐ.பொ.சு.மு.) எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் வெற்றியீட்டிய நவகத்தேகம நவோதய வித்தியாலயத்தின் பாடசாலை ஆசிரியர் ஒருவரான திருமதி சுசீலா ஹேரத், முறையிட்டுள்ளார். தனக்கு தபால் மூலம் கிடைத்த கடிதத்தின் மூலம் தானும், தனது குடும்ப உறுப்பினர்களும் தற்போது ஆபத்தில் உள்ளதாக திருமதி ஹேரத் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். “நான் சாட்சியைக் கொலை செய்தேன்... நான் உன்னை பாலியல்வல்லுறவுக்குட்படுத்திவிட்டு, கொலை செய்வேன். நீ எனது அரசியல் வாழ்க்கையைப் பாழாக்கினாய்..." கடிதம் இவ்வாறு தெரிவித்திருப்பதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. http://www.adaderana.lk/news/-death-threat-on-navagattegama-teacher (2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

### 2. வடக்கில் தமிழ் மாகாண சபை உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல்களும், தொந்தரவும்

தன்னை நாள் முழுவதும் வெள்ளை ‘வேனும்’ (ஆட்கடத்தல்களுக்கு பொறுப்பானவை என நம்பப்படும் வாகனங்கள்), மோட்டார் சைக்கிள் கும்பல்களும் பின்தொடர்வதாகவும்; தனது சகல நடமாட்டங்கள் கண்காணிக்கப்படுவதாகவும் முறைப்பாடொன்றை வட மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் வட்டுக்கோட்டை பொலிசில், செய்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. அவர் வாழ்கின்ற பகுதியில் வெள்ளை ‘வேன்’ அல்லது ‘மோட்டார் சைக்கிள்’ கும்பல்கள் ஆகியவற்றையிட்டு

அறிக்கைகள் இல்லை எனப் பொலிசார் கூறியிருப்பதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. வட மாகாண சபைத் தலைவர் திரு.சி.வி.கே.சிவஞானத்தின் கூற்றின் பிரகாரம், சில வட மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பொலிஸ் பாதுகாப்பு மீளப்பெற்றமைக்குப் பின்னால் பாதுகாப்பு அமைச்சு இருந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.
http://www.tamilnet.com/art.html?catid=79&artid=37330 (2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

### 3. மன்னாரில் காணாமல் போனோரின் தமிழ்க் குடும்பங்களுக்கு அச்சுறுத்தல்கள்

ஊடக அறிக்கைகளின் பிரகாரம், மன்னார் மாவட்டத்தில் ஓகஸ்ட் 8 க்கும் 11க்கும் இடையில் காணாமல் போனோர் மீதான இலங்கையின் ஜனாதிபதி ஆணைக்குழு அதன் விசாரணைகளை நடத்திய போது, அதன் முன்னிலையில் ஆஜராவதற்கு விரும்பிய காணாமல் போனோரின் உறவினர்களும், குடும்பங்களும் மன்னாரில் உள்ள (வட இலங்கை) இலங்கைப் பொலிசாரினாலும், இராணுவத்தின் புலனாய்வாளர்களினாலும் அச்சுறுத்தப்பட்டு, தொந்தரவு செய்யப்பட்டுள்ளனர். ஆணைக்குழு முன்னிலையில் தோன்றுவதில் பயன் இல்லை என்று மக்களுக்குக் கூறும் அளவுக்கு கூட இலங்கையின் இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர்கள் சென்றுள்ளதாக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.
http://tamilnet.com/art.html?catid=13&artid=37339 (2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

### 4. புலனாய்வு உத்தியோகத்தர்களினால் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பின்தொடரப்படுகின்றார்

இலங்கையின் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் திரு.உப்புள் ஜயசூரியவின் பாதுகாப்பு விடயம் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட போது, அவரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக புலனாய்வு உத்தியோகத்தர்கள் அமர்த்தப்பட்டுள்ளதாக மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் (டி.ஐ.ஜி.) திரு.அனுர சேனாநாயக்க நீதிமன்றத்திற்குத் தெரிவித்துள்ளார். இவ்விடயம் மீது தப்பர்த்தங்களைத் தெளிவுபடுத்துவதற்காக அவர்களது ஆளடையாளத்தை பொலிசார் வெளிப்படுத்த வேண்டும் என ஜயசூரியவின் சார்பாக ஆஜரான வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.
http://www.asianmirror.lk/news/item/2649-senior-dig-says-27-intelligence-officers-are-behind-basl-president
(2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

### 5. செயற்பாட்டாளரான மதகுருவுக்கு அச்சுறுத்தல்

2014 ஓகஸ்டில் ஒரு தொடரிலான சந்தேகத்திற்குரியதும், அச்சுறுத்தலிலானதுமான சம்பவங்களுக்கு தமிழ் அங்கிலிக்கன் திருச்சபை மதகுருவும், நன்கு அறியப்பட்ட மனித உரிமைக் காப்பாளருமான வண.பிதா சக்திவேல் முகங்கொடுத்துள்ளார். ஓகஸ்ட் 9 அன்று வெயாங்கொடையில் உள்ள அவரது தேவாலயத்திற்கு கொழும்பிலிருந்து பஸ்ஸில் வண.சக்திவேல் பிரயாணம் செய்த வேளை, ஒருவன் பஸ்ஸினுள் ஏறி, அந்த பஸ்ஸில் நிறைய ஆசனங்கள் வெற்றிடமாக இருந்த போதிலும், வண.சக்திவேலுக்கு அருகில் அமர்ந்தான். பின்னர் வண.பிதாவை அழுத்தியும், அவரின் உடலைத் தனது கையினால் அடித்தும், அவரை அவன் அச்சுறுத்தினான். தன்னைத் தூண்டிவிடுவதற்கான ஒரு முயற்சி என்பதை வண.சக்திவேல் உணர்ந்தது, பஸ் ஒரு குறிப்பிட்ட பஸ்தரிப்பில் நின்ற போது, அந்த பஸ்ஸில் இருந்து கீழிறங்கி, வெயாங்கொடைக்குச் செல்வதற்கு இன்னொரு பஸ்ஸில் ஏறினார். அத்தினத்தன்று தேவாலய வளவில் ஒரு சில சந்தேகத்திற்குரியவர்கள் நடமாடுவதை தான் கண்டதாக தேவாலய உறுப்பினர் ஒருவர் வண.சக்திவேலிடம் கூறியிருந்தார். ஓகஸ்ட் 9 அன்று கிட்டத்தட்ட இரவு 8 மணிக்கு தேவாலயத்தின் குளியலறையில் தான் இருந்த போது, நடமாடும் தொலைபேசியொன்றிலிருந்து தன்னை 'வீடியோ' எடுப்பதற்கு யாரோ ஒருவர் முயன்றதாக இன்னொருவர் கூறியிருந்தார். ஓகஸ்ட் 14 அன்று, தேவாலயத்தின் படலையின் (Gate) முன்பாக முழுமையாக வெளிர்நிறம் பூசப்பட்ட கண்ணாடிகளுடனான (இவ்வகையான 'வேன்'கள் ஆட்கடத்தல்களுக்கு பொறுப்பானவை என அறியப்பட்டுள்ளது) வெள்ளை 'வேன்' ஒன்று தரித்து நிற்பது அவதானிக்கப்பட்டதுடன், இன்னொரு மதகுரு அதன் அருகாகச் சென்ற போது, 'வேன்' அங்கிருந்து பறந்தோடிவிட்டது. ஓகஸ்ட் 16 அன்று, அரசாங்கத்தின் உத்தேச 'விதை மற்றும் பெருந்தோட்ட அதிகாரச் சட்டத்தின்' தன்மையையும், ஆபத்தையும் விவசாயிகளுடன் கலந்துரையாடுவதற்காக அண்மையில் வெயாங்கொடையில் உள்ள தனது தேவாலயத்திற்கு வண.சக்திவேல் சென்றிருந்தார். ஆனால், ஏதாவது கெடுதலுக்கு வண.சக்திவேல் உட்படுவார் என செய்தி கிடைத்ததினால், அவரது மேலதிகாரிகளினால் கொழும்புக்குத் திரும்பிச் செல்லுமாறு அவர் கேட்கப்பட்டார். ஓகஸ்ட் 22 அன்று கொழும்பில் விகாரமாதேவி பூங்காவில் காலை சுமார் 6 மணிக்கு கால்நடைப் பயிற்சிக்காக வண.சக்திவேல் சென்றிருந்த போது,

தனது தொலைபேசி மூலம் சுமார் 3 நிமிடங்களுக்கு வண.சக்திவேலை இராணுவ வீரர் ஒருவர் 'வீடியோ' செய்துள்ளார். 2014 ஓகஸ்ட் 4 அன்று காணாமல் போனோரின் தமிழ் குடும்பங்களின் கூட்டமொன்றைத் தாக்குவதற்கு வந்த கும்பலுக்கு தலைமைதாங்கிய பௌத்த மதகுரு ஒருவரினால் தனது தேவாலயத்திலிருந்து வண.சக்திவேல் துரத்தப்பட்டுள்ளதாகவும், தங்குவதற்கு அவருக்கு இடமில்லை எனவும் குற்றஞ்சாட்டப்பட்ட பின்னரே இந்த அச்சுறுத்தல்கள் வந்தன. கூட்டத்தில் வண.சக்திவேல் பங்குபற்றியிருந்ததுடன், கூட்ட அறைக்கு பிரவேசிப்பதிலிருந்து கும்பலை நிறுத்துவதிலும், வளவிலிருந்து கும்பலை அகற்றுவதற்குப் பொலிசாரை வற்புறுத்துவதிலும் வண.சக்திவேல் முன்னணி வகிபங்கொன்றை எடுத்திருந்தார்.



2014 ஓகஸ்ட் 4 அன்று CSR கூட்டத்தில் வண.சக்திவேலை நோக்கி பௌத்த மதகுருமார் கூச்சலிட்டார்கள் (© Melani Manel Perera)

## 6. காணாமல் போனோரின் குடும்பங்களுக்கும், காணாமல் போதலுக்கு எதிரான செயற்பாட்டாளர்களுக்கும் எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள்

வடக்கிலிருந்து காணாமல் போனோரின் தமிழ் குடும்பங்களின் கூட்டமொன்றை "மரணமடைந்த மற்றும் காணாமல் போனோரின் பெற்றோர் முன்னணி" ஓகஸ்ட் 4 அன்று குழப்பிய பின்னர், அடுத்த நாள் (ஓகஸ்ட் 5) அவர்கள் பத்திரிகையாளர் மகாநாடொன்றை நடத்தி, காணாமல் போனோரின் குடும்பங்களினதும், காணாமல் போதலுக்கு எதிரான செயற்பாட்டாளர்களினதும் மீது ஆதாரமற்ற சார்த்துரைகளைச் சுமத்தியதுடன், அவர்களை நிந்தனையும் செய்தனர். உண்மைக்கும், நியாயத்திற்குமான தமது போராட்டங்களில் காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு ஆதரவளித்த நபர்களாக ஆயர் ராயப்பு ஜோசப் (மன்னாரின் கத்தோலிக்க மேற்றிராணியார்), வண.செபமாலை (மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர்), வண.சக்திவேல், கலாநிதி நிமால்கா பெர்னாண்டோ, பிரிட்டோ பெர்னாண்டோ மற்றும் ருக்கி பெர்னாண்டோ போன்றவர்களை பெரும்பாலானோர் குறிப்பிட்டனர். செய்யப்பட்ட சார்த்துரைகளின் மத்தியில், நாட்டின் இறைமைக்கு எதிராகப் பணியாற்றியவர்களுக்கு மத்தியில் நிமால்கா பெர்னாண்டோவும், பிரிட்டோ பெர்னாண்டோவும் விளங்குகின்றார்கள். நாட்டில் எல்.ரி.ரி.ஈ.இன் மீள்-வெளிப்படலுக்கு ஈட்டிமுனையாக விளங்கிய எல்.ரி.ரி.ஈ. போராளிகளுக்கு அண்மையில் ருக்கி பெர்னாண்டோ பாதுகாப்பு அளித்துள்ளார். கிறிஸ்தவ தேவாலயத்திலிருந்து வண.எம்.சக்திவேல் துரத்தப்பட்டுள்ளதுடன், தங்கிவாழ்வதற்கு அவருக்கு ஓர்இடமில்லை என்பதுடன், CSRஇல் சில

பௌத்த மதகுருமார்களைத் தாக்குவதற்கு அவர் முயன்றுள்ளதுடன், சூழ்நிலை சூடு ஏறுவதற்கு அவரே பிரதானமாக பொறுப்பாக இருந்துள்ளார். "பெரட்டுகாமி" (முன்னரங்கு) அரசியல் கட்சி அதன் ஆரம்பத்திலிருநதே எல்.ரி.ரி.ஈ.சார்பானது என்பதுடன், தமிழ் புலம்பெயர்ந்தோர் சார்பானதுமாகும். தசாப்தகாலமாக எல்.ரி.ரி.ஈ.க்கு மேற்றிராணியார் ராயப்பு ஜோசப் ஆதரவளித்ததுடன், அவரும் அவரது உதவியாளர் வண.செபமாலையும் இந் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பதிலும், இத்தகைய நிகழ்ச்சிகளில் பங்கெடுப்பதற்கு மக்களைத்தூண்டுவதிலும் சம்பந்தப்பட்டிருந்தனர். வழக்கறிஞர் ஜே.சி.வெலியமுன ஒரு தேசத்துரோகி என்பதுடன், எப்பொழுதுமே தனது வாழ்க்கைத்தொழிலைக் காட்டிக்கொடுத்தார் . வடக்கிலிருந்து சகல பங்கெடுப்பாளர்களும் விசாரிக்கப்பட வேண்டும் எனவும் பௌத்த மதகுரு வலியுறுத்தினார்.
http://groundviews.org/2014/08/07/mob-disrupts-meeting-of-families-of-disappeared-police-government-hound-participants/
(2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

## 7. 'மனித உரிமைக் காப்பாளர்ளைச் சுட்டுவிட்டு, நரிகள் சாப்பிடுவதற்கு அவர்களை எறியுங்கள்" - செய்திப்பத்திரிகைக் கட்டுரை

நேரிடையாகத் தாக்குகின்ற கட்டுரையொன்றில், 2014 ஓகஸ்ட் 10இல் சிங்கள மொழித் தினசரியான "திவயின" "ஓநாய் மனப்பான்மையைக்" கொண்டுள்ள அரச சார்பற்ற நிறுவனக் கோமாளிகள் சுடப்பட்டு, நரிகள் சாப்பிடுவதற்கு அவர்களைக் காட்டுக்குள் எறிய வேண்டும் எனக் கூறியிருந்தது. தமது நிர்வாணநிலையை மூடிமறைப்பதற்குப் பயன்படுத்.தும் கோவணத் துணியைத், தமது கழுத்துக்களைச் சுற்றித் தொங்கவிடும் நிலைப்பாட்டினைக்கொண்ட நபர் மீது ஒரு 'மனித உரிமைகள் செயற்பாட்டாளர்' என்ற நாமத்தை இந்த இழிவான குழு ஒட்டியுள்ளதாக அது மேலும் தெரிவித்திருந்தது. வெளிநாட்டு டொலர் பைகள் மீது கண்ணும் கருத்தும்கொண்ட அரச சார்பற்ற நிறுவனங்களினால் செய்யப்படும் நிர்வாண மடமைச்செயலை சிறிய அளவில் எடுத்துக்கொள்ளப்படலாகாது. யாழ்ப்பாணம் பத்திரிகைக் கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு.தயாபரன் ஒரு பயங்கரவாதி என்றும், ஐவரைக் கொன்ற குண்டுத்தாக்குதல் சம்பவத்திற்கு பொறுப்பானவர் என்றும் கட்டுரை குற்றஞ்சாட்டியிருந்தது (2014 ஜூலையில் தமிழ் இதழியலாளர்களுக்கு பயிற்சியொன்றை யாழ்ப்பாணப் பத்திரிகைக் கழகம் இணை ஒழுங்குசெய்திருந்ததுடன், இது கும்பலொன்றினால் குழப்பப்பட்டிருந்தது. அத்துடன் யாழ்ப்பாணத்திலும், வடக்கிலும் பேச்சுச் சுதந்திரத்தின் சூழ்நிலைபற்றி பகிரங்க அறிக்கைகளை விடுத்திருந்தது). மனித உரிமைக் காவலர் கலாநிதி (திருமதி) நிமால்கா பெர்னாண்டோவை அவமதிப்பதை கட்டுரை நோக்காகக் கொண்டிருந்ததுடன், ஜெனீவாவுக்குத் தகவலை அனுப்புவதாக சட்டத்தரணி ஜே.சி.வெலியமுன, ருக்கி பெர்னாண்டோ, பிரிட்டோ பெர்னாண்டோ மற்றும் வண.சக்திவேல் போன்ற பெருமளவு வேறு மனித உரிமைக் காப்பாளர்களைக் குற்றஞ்சாட்டியுமிருந்தது. எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகளினால் மனித உரிமைகளுக்கான முன்னாள் ஐ.நா. உயர் ஸ்தானிகர் கௌரவமளிக்கப்பட்டுள்ளதாகவும், கொழும்பில் உள்ள அமெரிக்க நிலையம், அமெரிக்கத் தூதுவராலயம் மற்றும் சில வேறு தூதுவராலயங்கள் ஆகியன அரச சார்பற்ற தாபனங்களுக்கு "டொலர்களை" வழங்குவதன் மூலம் ராஜபக்ஷ அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காகப் பணியாற்றுகின்றன" எனவும் கட்டுரை மேலும் குற்றஞ்சாட்டியிருந்தது.
http://srilankabrief.org/2014/08/sri-lanka-shoot-ngo-traitors-and-throw-them-foxes-to-eat/ (சிங்களக் கட்டுரையின் ஆங்கில மொழிபெயர்ப்பு)
(2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

## 8. நாட்டின் நற்பெயரைக் கெடுக்கும் நோக்காகக் கொண்ட ஊடகப் பயிற்சி - செய்திப்பத்திரிகை

யாழ்ப்பாணத்தில் ஊடகப் பயிற்சிகள் தமிழ் புலம்பெயர்ந்தவர்களால் ஒழுங்குபடுத்தப்படுவதாகவும், வெளிநாடுகளுக்கு மனித உரிமை மீறல்கள் பற்றித் தகவலை அனுப்புவதன் மூலம் இலங்கையின் நற்பெயரைக் கெடுப்பதற்காக தமிழ் இளைஞர்களைப் பெறுமுகமாக வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் இவற்றுக்கு ஆதரவளிப்பதற்காகவும் தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கான கூட்டாண்மை சார்த்துரைத்துள்ளதாக 2014 ஓகஸ்ட் 1 அன்று "ரிவிர" என்ற சிங்கள தினசரிச் செய்திப்பத்திரிகையில் உள்ள செய்தி விடயமொன்று அறிக்கையிட்டுள்ளது. இத்தகைய நிகழ்ச்சிகளில் பங்கெடுக்க திரு.தயாபரன் (யாழ்ப்பாணம் பத்திரிகைக் கழகத்தின் ஒருங்கிணைப்பாளர்) "புலிகளின்" ( தமிழீழ விடுதலைப் புலிகள் - எல்.ரி.ரி.ஈ.) உறுப்பினர் ஒருவர் என்பதுடன், "புலிகளின்" இணையதளங்களுக்காக அவர் பணியாற்றியுள்ளார் எனவும் செய்தி விடயம் சார்த்துரைத்திருந்தது
http://www.rivira.lk/epaper/daily/fri/2014/08/01/index.html#3/z (சிங்களம்) (2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

## 9. வெளிவிவகார அமைச்சினாலும், பௌத்த மதகுரு ஒருவரினாலும் இராஜதந்திரிகளுக்கு எச்சரிக்கை


විදේශ කටයුතු අමාත්‍යාංශය ශ්‍රී ලංකාව
வெளிவிவகார அமைச்சு இலங்கை
Ministry of External Affairs Sri Lanka

Home Foreign Policy Media Consular Services Missions FAQ's Contact Us

External Affairs Ministry Statement on the Meeting at CSR on 4th August

The attention of the External Affairs Ministry has been drawn to an incident that occurred at the Centre for Society and Religion in Colombo on 4th August. According to reports, a meeting had been organized by the NGO "Right to Life Human Rights Centre" involving families of disappeared persons from the North. However, another NGO, the "Dead and Missing Person's Parents Front", had sought access to the meeting, demanding that their grievances be heard too. An ensuing argument had led to a tense situation which had subsequently been brought under control by law enforcement authorities. Several diplomatic representatives from western Missions based in Colombo had also been present at the event.

2014 ஓகஸ்ட் 4 அன்று கொழும்பில் காணாமல் போன வடக்கின் தமிழ் குடும்பங்களுடனான கூட்டத்தில் பெருமளவு இராஜதந்திரிகள் கலந்துகொண்டுள்ளனர். இக் கூட்டம் பௌத்த மதகுரு ஒருவரின் தலைமையிலான கும்பலினால் குழப்பப்பட்டது. சம்பவத்தைக் கண்டித்து பெருமளவு தூதுவராலயங்கள் பகிரங்க அறிக்கைகளை விடுத்திருந்தன. உத்தியோகபூர்வ பத்திரிகை வெளியீடு ஒன்றில், சம்பவத்தைக் கண்டிப்பதனை இலங்கையின் வெளிவிவகார அமைச்சு தவிர்த்திருந்தது. ஆனால், "நாட்டின் வரலாற்றில் கூருணர்விலான சங்கடமான வேளை ஒன்றில் சனசமூகங்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தைத் தொடர்ந்திருக்கச் செய்வதற்கு எழுச்சியை வழங்கும் உத்தேசரீதியிலான நிலையற்ற சூழ்நிலைகளுக்கு" இட்டுச்சென்றுள்ள "ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்திற்காக அல்லது சனசமூகத்திற்காக ஒழுங்குசெய்யப்பட்ட நிகழ்ச்சிகளில் புறநோக்கு இல்லாத தன்மையொன்றில் சம்பந்தப்பட்டுள்ளதாக" இராஜதந்திர சமுதாயத்தின் சில பிரிவுகளைக் குற்றஞ்சாட்டியிருந்தது. "உணர்வுபூர்வமானதன்மையொன்றைக் கொண்ட நிகழ்ச்சிகளில் பங்கெடுக்கும் போது உள்ளூர் கூருணர்வுகளையிட்டு அதிகளவு உணர்வுபூர்வமாக இருக்குமாறு இராஜதந்திர சமுதாயத்தை வலியுறுத்த அமைச்சு விரும்புகிறது" எனக் கூறி, மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், மனித உரிமைகள் காப்பாளர்களுக்கும் ஆதரவளிக்கக்கூடாது என இராஜதந்திர சமுதாயத்தை அமைச்சு எச்சரிக்கை விடுப்பதாகத் தோன்றியது. சமூகமளித்திருந்த இராஜதந்திரிகளைக் கூட்டத்தினுள் நுழைந்த பௌத்த மதகுரு ஒருவரின் தலைமையிலான கும்பல் விசாரிக்க வேண்டும் எனக் கோரியிருந்தது.
http://www.mea.gov.lk/index.php/en/component/content/article/1-latest-news/5065-external-affairs-ministry-statement-on-the-meeting-at-csr-on-4th-august (2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)
http://groundviews.org/2014/08/07/mob-disrupts-meeting-of-families-of-disappeared-police-government-hound-participants/

(2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

## 10. பாப்பாண்டவரின் விஜயத்தை மிதவாத பௌத்த குழுக்கள் எதிர்க்கின்றன

2015 ஜனவரியில் இலங்கைக்கு பிரான்சிஸ் போப்பாண்டவர் விஜயம் செய்யவுள்ளதுடன், சில தீவிரவாத பௌத்த குழுக்கள் எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளன. மனித உரிமைகள் மீறல்களுக்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு போப்பாண்டவர் ஆதரவைக்காட்டுவதுடன், கொலைகள், காணாமல் போதல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் மனித உரிமைகள்தொடர்பான பணியில் தீவிரமாகவுள்ள கத்தோலிக்கத் தலைவர்கள் மீதான தாக்குதல்கள் ஆகியன உட்பட நாட்டில் மனித உரிமைகள் சூழ்நிலை பற்றி கரிசனைகளை வெளிப்படுத்துவார் என்ற சாத்தியக்கூற்றின் காரணமாகவே இது நம்பப்படுகின்றது.
http://vaticaninsider.lastampa.it/en/world-news/detail/articolo/sri-lanka-sri-lanka-sri-lanka-35681/

(2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

### 11. கலகத்தில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை விடுவிக்காததிற்காக சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தருக்கு மரண அச்சுறுத்தல்கள்

2014 ஜூனில் அளுத்கம முஸ்லிம் எதிர்ப்புக் கலகங்கள் சம்பந்தமாக கைது செய்யப்பட்ட 13 சிங்கள சந்தேகநபர்களை விடுவிப்பதற்கு மறுத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் (டி.ஐ.ஜி.) திரு.வி.இந்திரன் அவரது உயிருக்கு பாரதூரமான பயமுறுத்தல்களுக்கு முகங்கொடுப்பதாக பீ.பீ.சி. சிங்கள சேவை அறிக்கையிட்டிருந்தது. களுத்துறை மற்றும் பாணந்துறை பொலிஸ் பகுதிகளுக்கு பொறுப்பாகவிருந்த டி.ஐ.ஜி. இந்திரன் கலகங்களின் பின்னர் ஓகஸ்ட் முற்பகுதியில் பொலிஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள நலன்புரி செயற்பாடுகளுக்கு பொறுப்பான டி.ஐ.ஜி.ஆக உடனடியாக செயற்படும்படியாக இடமாற்றம்செய்யப்பட்டார்.
http://srilankabrief.org/2014/08/dig-who-opposed-releasing-anti-muslim-rioters-received-death-threats/
(2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

### 12. சுவரொட்டி இயக்கமொன்றின் ஊடாக இரு பிரசித்தமான மனித உரிமைக் காப்பாளர்களுக்கு பயமுறுத்தல்

கோட்டைப் புகையிரத நிலையப் பகுதிக்கு அருகில் நாய்க்குட்டிகளை விற்பதற்கான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததுடன், இவை கலாநிதி (திருமதி) நிமால்கா பெர்னாண்டோ மற்றும் திரு.சுனில் ஜயசேகர ஆகிய இரு பிரசித்தமான மனித உரிமைக் காப்பாளர்களின் தொலைபேசித் தொடர்பு இலக்கங்களை உள்ளடக்கியிருந்தன. கலாநிதி நிமால்கா பெர்னாண்டோ ஜப்பானைத் தளமாகக் கொண்ட பாகுபாட்டினதும், இனவாதத்தினதும் சகல வடிவங்களுக்கு எதிரான சர்வதேச இயக்கத்தி;ன் தலைவர் என்பதுடன், திரு.ஜயசேகர சுதந்திர ஊடக இயக்கத்தின்(Media Freedom Watch Dog) கூட்ட அழைப்பாளராவார். இருவருமே இலங்கையின் நன்கு அறியப்பட்டதும், வெளிப்படையானதுமான மனித உரிமைக் காப்பாளர்கள் என்பதுடன், அண்மைய காலங்களில் பலதரப்பட்ட அச்சுறுத்தல்களினதும், நற்பெயரைக் கெடுக்கும் இயக்கங்களினதும் கீழ் அவர்கள் இருவருமே வந்துள்ளனர்.
http://srilankabrief.org/2014/08/puppies-for-sale-poster-campaign-to-intimidate-hrds/
(2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)



நாய்க்குட்டிகளை விற்பதற்கான சுவரொட்டியொன்றில் இரு மனித உரிமைக் காப்பாளர்களான நிமால்கா பெர்னாண்டோவினதும், சுனில் ஜயசேகரவினதும் நடமாடும் தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன (Photo: SriLanka Brief)

## ஆ. மனித உரிமைக் காப்பாளர்களை விசாரணை செய்தல்

### 13. யுத்தத்திற்குப் பிந்திய முன்னேற்றங்கள் மீதான சர்வதேச கருத்தரங்கொன்றின் பங்கெடுப்பாளர் மீது விசாரணை

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வருகை தந்திருந்த இந்திய கல்வியியல் செயற்பாட்டாளர் ஒருவரை பொலிஸின் பயங்கரவாத விசாரணைத் திணைக்களம் தடுத்து வைத்து, விசாரணை செய்தது. 2014 ஓகஸ்ட் 28 அன்று கிராமம் ஒன்றுக்கு வருகைதந்த போது அவர் முதலில்

தடுக்கப்பட்டதுடன், அவர் மீண்டும் மட்டக்களப்பில் ஓகஸ்ட் 29 அன்று விசாரிக்கப்பட்டு, பின்னர் கொழும்புக்கு கொண்டவரப்பட்டு, ஓகஸ்ட் 30 வரை விசாரிக்கப்பட்டார். யுத்தத்திற்குப் பிந்திய முன்னேற்றங்கள் மீதான கருத்தரங்கொன்றில் கலந்துகொள்வதற்காக இக்கல்விமான் வருகைதந்திருந்ததுடன், இதற்காக உத்தியோகபூர்வ 'விசா'வொன்றையும் பெற்றிருந்தார். அத்துடன் கருத்தரங்கின் முன் யுத்தத்திற்குப் பிந்திய உண்மைநிலைகள் பற்றி அறிவதற்காக மட்டக்களப்புக்கு வருகைதந்திருந்தார். மட்டக்களப்பில் அவருக்கு உதவியாக இருந்த உள்நாட்டுச் செயற்பாட்டாளர் ஒருவரின் வீட்டுக்குச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவரது பணி பற்றியும் விசாரணை செய்தார்கள்.

### 14. யாழ்ப்பாணப் பத்திரிகைக் கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் மீது விசாரணை

2014 ஓகஸ்ட் 4 அன்று, யாழ்ப்பாணம் பத்திரிகைக் கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளினால் விசாரிக்கப்பட்டார். 2014 ஜூலையில் கொழும்பில் தமிழ் இதழியலாளர்களுக்கு செயலமர்வொன்றுக்கான பயிற்சியொன்றை ஒழுங்குபடுத்துவதில் யாழ்ப்பாணப் பத்திரிகைக் கழகமும், தயாபரனும் பொறுப்பாக இருந்ததுடன், இது கும்பலொன்றின் அச்சுறுத்தல்களின் காரணமாக இரத்துச் செய்யப்பட வேண்டியிருந்தது. யாழ்ப்பாணத்தில் இதற்கு எதிரான போராட்டமொன்றை ஒழுங்கு செய்வதிலும் தயாபரன் சம்பந்தப்பட்டிருந்தார். கொழும்பில் இரத்தான ஊடகச் செயலமர்வு தொடர்பில் இராணுவத்தினாலும், பொலிஸினாலும் அவரும், ஏனைய இதழியலாளர்களும் இராணுவ சோதனை நிலையமொன்றில் தடுத்து நிறுத்தப்பட்டது தொடர்பாக நடந்த ஒரு சம்பவம், 2014 ஜூலை 31 அன்று யாழ்ப்பாணத்தில் நடந்த ஊடக சுதந்திரத்திற்கான எதிர்ப்பு மற்றும் 1998இல் யாழ்ப்பாணத்தில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவம் ஆகியனவே அவர் விசாரிக்கப்பட்ட பிரச்சனைகளாகும்.

## இ. பேச்சுச் சுதந்திரத்தின் மீறல்கள்

### 15. ஜிகாத்வாதிகள் என ஆறு இதழியலாளர்கள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்

“மரியாதைக்குரிய இதழியலாளர்களாகவும், எழுத்தாளர்களாகவும்” தம்மை வெளிப்படுத்தி “சிங்கள எதிர்ப்பு மற்றும் பௌத்த எதிர்ப்பு ஜிகாத்வாதிகளாக" இலங்கையில் ஆறு இதழியலாளர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு பெயரிடப்படாத ஈமெயில் ஒன்று “வலம் வருவது" பற்றி ஊடகம் அறிக்கையிட்டுள்ளது. பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சகல இதழியலாளர்களும் முஸ்லிம்கள் என்பதுடன், “டெயிலி மிரர்" மற்றும் 'சிலோன் ருடே" ஆகிய முன்னணி ஆங்கிலச் செய்திப்பத்திரிகைகளில் பணியாற்றும் பெண் இதழியலாளர்களையும், வழக்கறிஞர் ஒருவரையும் உள்ளடக்குவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. “அவர்கள் (இதழியலாளர்கள்) அசௌகரியமான உண்மைகளை மறைப்பதுடன், பொய்களை உரைக்கின்றனர், சிங்கள மக்கள், பௌத்தர்கள் மற்றும் சிங்களவர்களையும், பௌத்தர்களையும் மற்றும் அவர்களது தலைவர்களையும் பிரதிநிதிப்படுத்தும் தாபனங்கள் மீது தீர்ப்பினை நிறைவேற்றி கங்காரு நீதிமன்ற நீதிபதிகளின் வகிபங்கினை எடுக்கும் தூரத்திற்குக்கூடச் செல்கின்றனர் என ஈமெயில் சார்த்துரைத்துள்ளதாக ஊடக அறிக்கை வலியுறுத்தியிருந்தது. மக்களுக்கு எடுத்துச்செல்வதற்கு அவர்கள் விருப்பம் கொண்டுள்ள விடயங்களை மட்டுமே வெளியிடுவது, அதை அடிக்கடி மீட்டுரைப்பதனால் அது உண்மையென்று ஏற்றுக்கொள்ளப்படும் என்பதே அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ள முறைமையியலாகும் ( நாசி ஊடக அமைச்சர் ஜோசப் கொப்பல்ஸினால் மிகவும் வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்ட பயங்கரமான பிரச்சார முறையே மீள்வலியுறுத்தல் ஊடாக மீட்டுரைத்தல் ஆகும்).
http://www.nation.lk/edition/lens/item/31677-the-jihadi-journalists-of-sri-lanka.html (2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

## 16. வவுனியாவில் தமிழ் இதழியலாளர்களுக்கு எதிரான மரண அச்சுறுத்தல்



ஊடக அறிக்கைகளின் பிரகாரம், 2014 ஓகஸ்ட் 2 அன்று வவுனியாவில் திரு.நவரத்தினம் கபிலநாத் என்ற இதழியலாளர் ஒருவருக்கு தொலைபேசி ஊடாக அவரும், அத்துடன் யாழ்ப்பாணத்தில் தளத்தைக் கொண்ட சக இதழியலாளர்களும் கொல்லப்படுவார்கள் என எச்சரிக்கை செய்து மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. "உனக்கு எங்களைத் தெரியாது. பொலிசாருக்கு எம்மைப் பற்றி முறைப்பாடு செய்த பின்னர் உயிர் வாழ்வதற்கு உனக்கு விருப்பமில்லையா" எனப் பொலிசாரிடம் முறைப்பாடொன்றை அவர் தாக்கல் செய்யவிருப்பதாக சொன்ன பின்னர் கபிலநாத்திடம் அனாமதேய அழைப்பாளர் கூறியிருந்தார்.

நவரத்தினம் கபிலநாத் (முகநூல் புகைப்படம்)

http://www.tamilguardian.com/print.asp?articleid=11724 (2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

## 17. நியூயோர்க் ரைம்ஸ் இதழியலாளர்களுக்கான 'விசா" தாமதப்படுத்தப்பட்டுள்ளது

அளுத்கம தொடர்பான சம்பவங்கள் (இங்கு 2014 ஜூனில் முஸ்லிம் எதிர்ப்பு கலகங்கள் இடம்பெற்றன) உட்பட சில உள்நாட்டுச் சம்பவங்கள் மீது அறிக்கையிடுவதற்காக இலங்கைக்கு வருகை தருவதற்கு நியூயோர்க் ரைம்ஸின் தென் ஆசிய நிருபர் கார்டினர் ஹரிஸ் மேற்கொள்ளவுள்ள விஜயத்துக்கான வேண்டுகோள் ஒன்று "அவரது வருகையை அங்கீகரிப்பதற்கான நேரம் உகந்ததல்ல" எனக் கூறப்பட்டு தாமதித்து வைக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளதாக 2014 ஓகஸ்ட் 24இன் ஊடக அறிக்கையொன்று கூறியிருந்தது.

http://www.thesundayleader.lk/2014/08/24/visa-on-hold-for-us-journo/ (2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

## 18. தமிழில் தேசிய கீதத்தைப் பாடியதற்காக விசாரணை

தெமட்டகொடை விபுலானந்த தமிழ்ப் பாடசாலையில் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டதாக அறிக்கையிடப்பட்ட பின்னர், விசாரணையொன்றை நடத்தி, அவசியமான நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவு பிறப்பித்து கொழும்பு பிராந்திய கல்விப் பணிப்பாளருக்கு கொழும்பு பிரதேசச் செயலாளர் கடிதமொன்றை அனுப்பியுள்ளார். இலங்கை ஆசிரியர் சங்கத்தின் (CTU) கூற்றுப்படி, பிரதேசத்தின் சிவில் பாதுகாப்புக் குழுவில் தேசிய கீதத்தைப் பாடுவது பற்றி கேள்வி எழுப்பப்பட்டது. தமிழில் தேசிய கீதத்தைப் பாடியதற்காக தமிழ் பாடசாலை அதிபர்களைத் தொந்தரவு செய்வதை நிறுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு தேசிய ஒருமைப்பாட்டுக்கான அமைச்சரிடம் CTU வேண்டிக் கொண்டது. இலங்கையில் சிங்களமும், தமிழும் அரசகரும மொழிகள் என்பதுடன், தேசிய கீதத்தின் தமிழ் வாசகம் அரசியலமைப்பில் உள்ளதுடன், தமிழில் தேசிய கீதத்தைப் பாடுவது தமிழ் பாடசாலைகளில் வழக்கமாக இருந்துள்ளது என CTU சுட்டிக்காட்டியுள்ளது.

http://sinhala.lankanewsweb.net/news/13578-2014-08-24-09-21-41 (2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

## 19. நீதிமன்ற விசாரணைகளையிட்டு செய்தி சேகரிப்பதிலிருந்து பத்திரிகை தடுத்துநிறுத்தப்பட்டது

2007இல் பாதுகாப்பு அமைச்சினால் மிக்(Mig) 29 இன் சர்ச்சைக்குரிய கொள்வனவு தொடர்பில் விபரங்களை வெளிப்படுத்திய கட்டுரையொன்றின் மீது *"த சண்டே லீடர்"* செய்திப்பத்திரிகைக்கு எதிராகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் (அத்துடன் ஜனாதிபதியின் சகோதரர்) தாக்கல் செய்யப்பட்ட அவதூறு வழக்கொன்றின் குறுக்கு விசாரணைக்கு முகங்கொடுப்பதற்காக அவர் வந்த போது ஊடக ஆளணியினருக்கு கல்கிஸை மாவட்ட நீதிமன்றத்தை பொலிசார் மீண்டும் ஒரு முறை தடை செய்தனர். நீதிமன்ற விசாரணைகள் பொது மக்களுக்கு வெளிப்படையானவை என்பதுடன், ஊடகங்கள் கிரமமாக நீதிமன்றத்திற்குச் சென்று, அத்தகைய விசாரணைகளையிட்டு செய்தி சேகரிக்கின்றன. 2014 மே மாதத்தில் இதே வழக்கில் திரு.ராஜபக்ஷ சாட்சியமளித்த போதும் இதையொத்த சம்பவமொன்று நடந்திருந்தது.

https://www.colombotelegraph.com/index.php/press-barred-again-from-covering-gotabayas-cross-examination-in-court/ (2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

## ஈ. ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தை மீறுதல்

### 20. காணாமல் போனோரின் குடும்பங்களின் ஒன்றுகூடலினுள் பௌத்த மதகுருமார் தலைமையிலான கும்பல் படையெடுப்பு

“மரணமான மற்றும் காணாமல் போனவர்களின் பெற்றோர் முன்னணி" என தம்மைப் பின்னர் அடையாளம் காட்டிய பௌத்த மதகுரு ஒருவரின் தலைமையிலான கும்பல் வட மாகாணத்திலிருந்து காணாமல் போனவர்களின் தமிழ்க் குடும்பங்களின் கூட்டமொன்றினுள் புகுந்து, கூட்டம் நிறுத்தப்பட வேண்டும் எனக் கட்டாயப்படுத்தியது. பொலிசார் அழைக்கப்பட்ட போதிலும், கூட்டத்திற்கும், பங்கெடுப்பாளர்களுக்குமான பாதுகாப்புக்கு உத்தரவாதமளிப்பதற்கு அவர்கள் (பொலிசார்) மறுத்தனர். படையெடுத்த கும்பலைக் கலைப்பதற்கு பொலிசார் ஆரம்பத்தில் மறுத்ததுடன், கூட்டத்தின் பங்கெடுப்பாளர்களும், அமைப்பாளர்களும் வற்புறுத்திய போது மட்டுமே அவ்வாறு செய்தனர். கூட்டத்தின் அமைப்பாளர்களும், பங்கெடுப்பாளர்களும் சர்வதேச யுத்தக் குற்ற விசாரணையொன்றுக்கு ஆதரவளிப்பதன் மூலம் அரசாங்கத்தின் நற்பெயரைக் கெடுப்பதற்கு முயல்வதாக கும்பல் வசைபாடியதுடன், அவர்களை எல்.ரி.ரி.ஈ. (பயங்கரவாத) ஆதரவாளர்களாக நாமமுமிட்டது. அத்துடன் ஆதாரமற்ற சார்த்துரைகளையும் சுமத்தியது. CSR ஒன்றுகூடலினுள் படையெடுத்த கும்பலில் இருந்த பௌத்த மதகுரு ஒருவர் அங்கு வந்துள்ள குடும்பங்கள் கொல்லப்பட்ட எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களின் குடும்பங்கள் என வலியுறுத்தினார். கூட்டத்தை வழிநடத்தியவர்களும், கலந்து கொண்டவர்களும் பயங்கரவாதிகள் என்றும், அது இரகசியமான குகையொன்றில் நடைபெற்ற சட்டவிரோதமான கூட்டமொன்று என்றும் அவர் மேலும் வலியுறுத்தினார். பின்னர் நாட்டுக்கு எதிரான யாரேனும் நபர்களை அடித்து, துரத்துமாறு பிரஜைகளுக்கு அவர் அழைப்புவிடுத்தார். தேசத்துரோகிகள் எங்கும் வாழ்வதற்கு அனுமதிக்கப்படக்கூடாது என்று அவர் சொன்னதுடன், தேசத்துரோகிகளுக்கு வழங்கப்படுவதற்கான தண்டனை மரணதண்டனை என்றால் அதைச் சட்டபூர்வமாக்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு அவர் அரசாங்கத்திற்கு அழைப்புவிடுத்தார்.
http://groundviews.org/2014/08/07/mob-disrupts-meeting-of-families-of-disappeared-police-government-hound-participants/
(2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

### 21. வடக்கிலிருந்து காணாமல் போனோரின் தமிழ் குடும்பங்களுக்கு கொழும்பில் கூட்டங்களில் கலந்து கொள்ளக்கூடாதென அச்சுறுத்தல்

ஓகஸ்ட் 3 அன்று ஆளடையாளம் தெரியாத நபர் ஒருவரிடமிருந்து தாய் ஒருவருக்கு தொலைபேசி அழைப்பொன்று கிடைத்ததுடன், கொழும்புக்கு கூட்டமொன்றுக்கு அவர் செல்லவிருப்பது தமக்குத் தெரியும் என தொலைபேசி அழைப்பாளர் கூறியிருந்ததாக அப்பெண்மணி முறையிட்டிருந்தார். கூட்டத்திற்கு முன்னதாக உள்ள நாட்களில் ஆளடையாளம் தெரியாத நபர்களிடமிருந்து இதையொத்த அழைப்புக்களை சில வேறு தாய்மார்களும் பெற்றுக்கொண்டதுடன், சில வேளைகளில், குற்றவியல் விசாரணைப் பிரிவிலிருந்து (சி.ஐ.டி) அழைப்புவிடுப்பதாகவும், அவர்களது நடமாட்டங்கள் குறித்து விசாரிப்பதாகவும், சொல்லப்பட்ட அமைவிடமொன்றில் தம்மைச் சந்திப்பதற்கு அவர்கள் வரவேண்டுமெனவும் அழைப்பாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். கூட்டம் நடப்பதற்கு சில தினங்களுக்கு முன் தனது வீட்டுக்கு வெளியே சி.ஐ.டி. உத்தியோகத்தர்கள் நிற்பதை இன்னொரு தாய் கண்டுள்ளதுடன், அவர் கொழும்புக்குச் செல்வதற்கு முன் அவரை அவர்கள் மிரட்டியுள்ளனர். கூட்டம் நடப்பதற்கு முன்னைய தினங்களில் ஆளடையாளம் தெரியாத நபர்களிடமிருந்து அவர் இதையொத்த அழைப்புக்களையும் பெற்றுள்ளார். ஓகஸ்ட் 3 அன்று ஆளடையாளம் தெரியாத நபர் ஒருவரிடமிருந்து மிரட்டும் தொலைபேசி அழைப்பொன்று நிகழ்ச்சியின் வடக்கினை தளமாகக் கொண்ட அமைப்பாளர்களின் ஒருவருக்கு கிட்டியதுடன், கூட்டமொன்றுக்காக அன்று இரவு ( 3ஆம் திகதி) கொழும்புக்கு காணாமல் போனோரின் குடும்பங்களை அவர் கொண்டு செல்கின்றாரா என அவரிடம் கேட்கப்பட்டது. கொழும்பில் தான் 4ஆம் திகதி இருந்த வேளை, வடக்கில் உள்ள தனது வீட்டுக்கு சி.ஐ.டி.இனர் வருகைதந்து, தனது நடமாட்டங்கள் பற்றி கேட்டறிந்ததாக இன்னொரு தாய் முறையிட்டிருந்தார். இக் கூட்டம் நடைபெறுவதற்கு ஆகக்குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்னர் இருந்தே இத்தகைய அனாமதேய அழைப்புக்களை இத் தாய்மார்கள் பெற்றுள்ளனர்.
http://groundviews.org/2014/08/07/mob-disrupts-meeting-of-families-of-disappeared-police-government-hound-participants
(2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)



மதகுருமார்களின் தலைமையிலான கும்பலினால் வடக்கிலிருந்து தமிழ் பங்கெடுப்பார்கள் உதவியற்றவர்களாக்கப்பட்டனர் (©Melani Manel Perera)

## 22. கூட்டம் கலைந்த பின்னர் காணாமல் போனோர் குடும்பங்களையிட்டு பொலிஸ் கண்காணிப்பு

மேற்படி கூட்டம் கலைந்த பின்னர், வடக்கிலிருந்து வந்த காணாமல் போனோரின் தமிழ் குடும்பங்கள் வளவில் இன்னும் உள்ளனவா என்பதைக் கண்டறிவதற்காக அதே தினம் இரவு கூட்டம் நடைபெற்ற இடத்திற்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் வருகைதந்தனர். இரவு தங்குவதற்கு தமிழ்க் குடும்பங்கள் திட்டமிட்டுள்ளனவா என இன்னொரு தேவாலயத்தினால் நிருவகிக்கப்படும் நிலையமொன்றின் பணியாளரிடமிருந்து அவர்கள் விசாரணை செய்தனர். எனினும், பாதுகாப்புக்கான அச்சங்களின் காரணமாக அன்று மாலையே தமது வீடுகளுக்கு செல்வதென தமிழ்க் குடும்பங்கள் தீர்மானித்திருந்தன.
http://groundviews.org/2014/08/07/mob-disrupts-meeting-of-families-of-disappeared-police-government-hound-participants/
(2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

## 23. கட்டாயப்படுத்தப்பட்ட காணாமல் போனவர்களின் சர்வதேச தினத்தின் போது போராட்டக்காரர்களைப் பொலிசார் தடுத்துநிறுத்தினர்

2014 ஓகஸ்ட் 30 அன்று, மனுவொன்றைக் கையளிப்பதற்காக அரசாங்க அதிபரின் அலுவலகத்திற்கு பேரணியாகச் செல்வதில் இருந்து காணாமல் போனோரின் குடும்பங்களையும், எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளையும், மனித உரிமைக் காப்பாளர்களையும் மற்றும் மதகுருhர்களையும் பொலிசார் தடுத்துநிறுத்தினர். வவுனியா நகர சபைக் கட்டிடத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றின் பின்னர் அமைதியான பேரணி ஆரம்பமாகியது.
http://tamilnet.com/art.html?catid=13&artid=37363 (2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)




2014 ஓகஸ்ட் 30 அன்று அமைதியான போராட்டங்களை பொலிசார் தடுத்தனர் (©Melani Manel Perera)

## 24. சமயங்களுக்கிடையிலான நல்லிணக்கப் பணி மீது இராணுவக் கண்காணிப்பு

தேசிய சமாதானப் பேரவையினால் (NPC) நடத்தப்படும் சமயங்களுக்கிடையிலான நல்லிணக்கப் பணி இராணுவத்தினாலும், பொலிசினாலும் கண்காணிப்புக்கு உட்படுவதாக தே.ச.பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா அறிக்கையிட்டுள்ளார். கலாநிதி பெரேராவின் கூற்றுப்படி, "வடக்கினதும், கிழக்கினதும் முன்னைய யுத்த வலயங்களுக்கு வெளியே இந் நிகழ்ச்சிகளில் இரண்டு இடம்பெற்றதுடன், இக் கண்காணிப்பின் நடைமுறையானது நாடு முழுவதும் பரவியுள்ளது என்பதைச் சுட்டிச்சொல்கிறது. கண்டியில், நீண்ட காலம் நிலைத்திருக்கும் மதிப்புவாய்ந்த சிவில் சமூகத் தாபனமொன்றின் தனிப்பட்ட மண்டபம் ஒன்றின் உள்ளே சமயங்களுக்கிடையிலான கலந்தாய்வு நடந்த போது, சிவில் உடைகளில் புலனாய்வு ஆளணியினர் மண்டபத்தினுள் பிரவேசித்து, கலந்துரையாடலைப் பதிவுசெய்து கொண்டிருந்தனர். காலியில், சகல சனசமூகங்களையும் சேர்ந்த சிறுவர்களையும், அவர்களது பெற்றோர்களையும் ஒன்றிணைத்த நிகழ்ச்சித்திட்டமொன்று நடந்த போது அதில் பங்குபற்றுவதற்காக உள்நாட்டுப் பொலிசாரும் வரவழைக்கப்பட்டிருந்தனர். எனினும், நிகழ்ச்சித்திட்டத்தை விசாரிப்பதற்காக இன்னொரு பொலிஸ் குழாமும் வந்தது. கிழக்கில் அட்டாளைச்சேனையில், இளைஞர் முகாமொன்று நடத்தப்பட்டபோது முன்கூட்டியே உள்ளூர் பொலிசாருக்கும், உள்ளூர் அரசாங்க அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அவர்கள் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டனர். ஆனால், அவர்கள் பிரசன்னமாகியிருந்த போதிலும், ஆயுதங்களுடன் சீருடையிலான இராணுவ ஆளணியினர் அங்கு வந்து, இரு நாட்களின்போது மூன்று புறம்பான தருணங்களில் நிகழ்ச்சித்திட்ட அமைப்பாளர்களை விசாரித்தனர். மட்டக்களப்பில் (இதுவும் கிழக்கில்) நடைபெற்ற இளைஞர்களினால் கலாசாரப் பெறுமதிகளை முன்னேற்றுதல் மீதான இந்த திங்கட்கிழமை (ஓகஸ்ட் 25) இடம்பெறவிருந்த நிகழ்ச்சித்திட்டம் இரு இராணுவ ஆளணியினரால் விசாரிக்கப்படுவதற்கு இட்டுச்சென்றது" என கலாநிதி பெரேரா எழுதியிருந்தார்.
http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=109117
(2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

## 25. எதிர்ப்புத் தெரிவித்த தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர்களுக்கு எச்சரிக்கை

உண்ணாவிரத இயக்கமொன்றில் ஈடுபட்டிருந்த மூன்று தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை என்பதுடன், உண்ணாவிரத இயக்கத்தின் விளைவொன்றாக அவர்கள் (கைதிகள்) இறந்தால் சடலங்களை மட்டுமே அவர்கள் (பெற்றோர்கள்)

பார்க்கக்கூடியதாக இருக்கும் என எச்சரிக்கை செய்யப்பட்டனர். எந்தக் குற்றச்சாட்டுக்களும் இன்றி ஆறு வருடங்களாக அனுராதபுரம் சிறையில் மூன்று தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், ஏனைய தமிழ் அரசியல் கைதிகள் வைக்கப்பட்டுள்ள 'வார்ட்'டுக்குத் தம்மை இடமாற்றம் செய்யும்படி கோரிக்கை விடுத்து அவர்கள் உண்ணாவிரத இயக்கமொன்றில் ஈடுபட்டிருந்தனர். சிங்களக் கைதிகள் தம்மைத் தாக்குவதாகவும், தமது உணவுப் பங்கீடுகளை எடுத்துச் செல்வதாகவும் மூன்று கைதிகளும் முறைப்பாடு செய்துள்ளனர்.
http://srilankabrief.org/2014/08/parents-told-to-wait-to-see-the-dead-bodies-of-3-tamil-prisoners/#more-19696
(2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

### 26. அரசாங்கச் சார்பு குழுவினால் தொழிற்சங்கக் கூட்டம் குழப்பப்பட்டது

தொழிற்சங்கக் கூட்டணியினால் 2014 ஓகஸ்ட் 27 அன்று ஒழுங்குபடுத்தப்பட்ட விழிப்பியல் கூட்டமொன்றை அரசாங்க சார்பிலான தொழிற்சங்கமான ஸ்ரீ லங்கா நிதாஸ் சேவக சங்கமயவின் உறுப்பினர்கள் குழப்பியதாகவும், பங்கெடுப்பாளர்களைத் தாக்கியதாகவும் அரசாங்க அச்சக தொழிற்சங்க கூட்டாண்மையின் பேச்சாளர் கூறினார். ஊடகங்களின் அறிக்கைகளின் பிரகாரம், எதிர்த்தரப்பு ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) ஆகியவற்றைச் சேர்ந்த ஊழியர்களே தொழிற்சங்க கூட்டாண்மையின் உறுப்பினர்களாவர். அரசாங்க அச்சகர் அரசியல்ரீதியாக நியமிக்கப்பட்ட ஒருவர் எனவும், ஸ்ரீ.ல.சு.க. (ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆளும் கட்சி) ஊவா மாகாண சபைத் தேர்தல் பிரச்சார விடயதானங்கள் அரசாங்க அச்சகத்திலேயே அச்சிடப்படுகின்றன எனவும் அவர்கள் சார்த்துரைத்துள்ளனர்.
http://www.hirunews.lk/90491/tense-situation-at-government-press (2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

### 27. வேலைநிறுத்தம் மீது உத்தரவிடும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது

நோயாளி ஒருவரின் மனுவொன்றின் மீதான அடிப்படையில் 2014 ஓகஸ்ட் 29 அன்று நான்கு நாட்களுக்கு அரசாங்க வைத்தியசாலைகளின் செயற்பாடுகளைப் பாதித்த துணை மருத்துவர்களின் வேலை நிறுத்தம் மீது உத்தரவிடும் கட்டளையொன்று கொழும்பு மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.
http://www.hirunews.lk/90700/enjoining-order-issued-on-paramedics-strike (2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

## உ. ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தை மீறுதல் (அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது பயமுறுத்தலும், கட்டுப்பாடுகளும்)

### 28. அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்து அச்சுறுத்தலை அரசாங்கம் 'கவனத்திற்கெடுக்கின்றது'

கட்டுப்படுத்தப்படாத சூழல்களில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அபிவிருத்தி மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு ஆகியன உட்பட நிதிசார் முகாமைத்துவத்திற்கு ஓர் அச்சுறுத்தலாக விளங்குவதாக கொழும்பில் பாதுகாப்புக் கருத்தரங்கில் பேசிய நிதி அமைச்சுக்கான செயலாளர் திரு.பி.பீ.ஜயசுந்தர கூறியுள்ளார்.
http://colombogazette.com/2014/08/18/government-notes-threat-from-ngos/ (2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

### 29. மன்றங்களையும், இலாபமீட்டாத தாபனங்களையும் கண்காணிப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்குமான சட்டங்கள்

பாராளுமன்றத்தில் தனிப்பட்ட உறுப்பினர் மசோதாக்கள் மூலம் ஒன்றிணைக்கப்படும் மன்றங்கள் பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சினால் வரையப்படும் புதிய சட்டங்கள் ஊடாக அ.சா.தா செயலகத்தினால் கண்காணிக்கப்படும் என *சண்டே ரைம்ஸ்* அறிக்கையிட்டிருந்தது. கம்பெனிகள் பதிவாளருடன் பதிவுசெய்யப்பட்டுள்ள இலாபமீட்டாத தாபனங்கள், நம்பிக்கைப் பொறுப்புக்கள் மற்றும் சில சங்கங்கள் ஆகியன மீது கட்டுப்பாடுகளை சட்டம் சுமத்தும் என அறிக்கை தெரிவித்திருந்தது. "உத்தேச திருத்தங்களின் கீழ், அவர்கள் செயலகத்துடன் பதிவுசெய்து கொள்ள வேண்டும் அல்லது வெளிநாட்டு நிதியங்களைப் பெறுவதற்கும் உள்ளூர் நாணயக் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்குமான உரிமையை இழப்பார்கள். தமது செயற்பாடுகள் பற்றி அவர்கள் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கொரு தடவை அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அரச சார்பற்ற நிறுவனங்கள் செய்வது போன்று நியம புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அவர்கள் கைச்சாத்திட வேண்டும். ஆயுள்கால

பதிவுக்கான தற்போதைய ஏற்பாடு வருடாந்த புதுப்பிக்கத்தக்க பதிவினால் பதிலீடு செய்யப்படும்" என அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசியச் செயலகத்தின் பணிப்பாளர் திரு.சமன் திசநாயக்க தெரிவித்திருந்தார்.
http://sundaytimes.lk/140831/news/after-ngos-foundations-to-come-under-watch-115994.html
(2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

### 30. விபச்சாரத்தை சட்டபூர்வமாக்குவதற்கு நிர்ப்பந்திக்கும் சர்வதேசத் தாபனங்களை அமைச்சர் குற்றஞ்சாட்டுகிறார்

வெளிநாடுகள் மீது தங்கியுள்ள சர்வதேசத் தாபனங்கள் விபச்சாரத்தை சட்டபூர்வமாக்குவதற்கு நிர்ப்பந்திப்பதாக சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சர் திரு.திஸ்ஸ கரலியத்த கூறியுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. "பெண்கள் பற்றி பேசுகையில் ஒரு சிறிய பிரச்சனை உள்ளது. சர்வதேசத் தாபனங்களுக்காக ஒரு சில பெண்கள் பணியாற்றுகிறார்கள். இப்பதவியை வழங்குவதற்கு உங்கள் நாடு யாரேனும் பெண்களைக் கொண்டிருக்கவில்லையா என அவர்கள் தூதுவராலயங்களிலிருந்து கேட்கிறார்கள்" என அமைச்சர் மேலும் கூறினார்.
http://www.lankasrinews.com/view.php?22IMM303lOo4e2BmAca25YAdd3Y5fac3mBJe43Oln0236A43 (2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)

## ஊ. மாணவச் செயற்பாட்டாளர்களை அடக்குதல்

### 31. இனவாத தகராறுகளைத் தூண்டுவதாக மாணவர் ஒன்றியத்தினதும், அரசியல் கட்சியினதும் மீது குற்றச்சாட்டு

பயங்கரவாத எதிர்ப்புச் சம்பவங்களின் கீழ் கைது செய்யப்பட்ட சப்ரகமுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்களின் சம்பவங்கள் மீது மாணவர்கள் மத்தியில் இனவாத மோதல்களைத் தூண்டுவதாக பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளனத்தையும், முன்னணி சோஷலிஸக் கட்சியையும் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பீ.திசநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளதாக மனித உரிமைகளுக்கான மாணவர்கள் என்ற அமைப்பு தெரிவித்தது. காடையர்களின் குழுவொன்றினால் தாக்கப்பட்ட பின்னர் இம் மாணவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர் காயங்களினால் அவதிப்படுகின்றார்.
*மூலம்: "இலங்கையில் மாணவர்களின் அடக்குமுறை மீதான மாதாந்தப் புதுப்பித்தல் - ஓகஸ்ட் 2014, "மனித உரிமைகளுக்கான மாணவர்கள்"*

### 32. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஐந்து மாணவர்கள் கைது

முகாமைத்துவப் பீடமொன்றை அமைக்குமாறு கோரி 'அமர்ந்திருக்கும் இயக்கமொன்றை' பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் 2014 ஓகஸ்ட் 21 அன்று ஆரம்பித்தார்கள். ஓகஸ்ட் 20 அன்று, அமர்ந்திருக்கும் இயக்கத்திற்காக ஒழுங்குகளைச் செய்வதில் மாணவர்கள் ஈடுபட்டிருக்கும் போது, பொலிசார் அங்கு வந்து, அடுத்த நாள் பொலிஸ் நிலையத்திற்கு வந்து, வாய்மொழியிலான வாக்குமூலமொன்றை அளிக்குமாறு மாணவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். ஓகஸ்ட் 21 அன்று, வாய்மொழியிலான வாக்குமூலமொன்றை அளிப்பதற்காக பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு 5 மாணவர் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஓகஸ்ட் 22 அன்று, வாக்குமூலங்களை வழங்குவதற்காக பொலிஸ் நிலையத்திற்கு 3 மாணவர்கள் சென்றதுடன், அவர்கள் கைது செய்யப்பட்டு, கண்டி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். சட்டவிரோதமான நிருமாணங்களும், சட்ட விரோதமான பிரவேசவழியுமே மாணவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களாகும். பதினான்கு நாட்களுக்கு மாணவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. ஓகஸ்ட் 25 அன்று, மேலும் இரு மாணவர்கள் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றதுடன், அவர்களும் விளக்கமறியலில் வைக்கப்படுவதற்கு உத்தரவிடப்பட்டது
*மூலம்: "இலங்கையில் மாணவர்களின் அடக்குமுறை மீதான மாதாந்தப் புதுப்பித்தல் - ஓகஸ்ட் 2014", "மனித உரிமைகளுக்கான மாணவர்கள்"*

### 33. நான்கு திறந்த பல்கலைக்கழக மாணவர் தலைவர்கள் இடைநிறுத்தப்பட்டனர்

திறந்த பல்கலைக்கழக வளாகத்தின் முன்னிலையில் 2014 ஓகஸ்ட் 12 அன்று தொழிற்சங்கத்தின் உறுப்பினராகச் சேருவதற்கான உரிமையைக் கோரி போராட்ட இயக்கமொன்றுக்கு

வழிகாட்டியமைக்காக கொழும்பில் உள்ள திறந்த பல்கலைக்கழகத்தின் நான்கு மாணவர் தலைவர்கள் இடைநிறுத்தப்பட்டனர். இது இடைநிறுத்தப்பட்ட திறந்த பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கையை பதினாறாக அதிகரித்துள்ளது.

*மூலம்: "இலங்கையில் மாணவர்களின் அடக்குமுறை மீதான மாதாந்தப் புதுப்பித்தல் - ஓகஸ்ட் 2014", "மனித உரிமைகளுக்கான மாணவர்கள்"*

## எ. எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகளின் அடக்குமுறை

### 34. ஊவா மாகாண தேர்தல்களின் எதிர்க்கட்சிகளுக்கு ஒரே மட்டத்தில் செயற்படுவது மறுக்கப்பட்டது

2014 செப்ரெம்பர் 20 அன்று ஊவா மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றது. பலதரப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம், 50க்கு மேற்பட்ட எதிர்த்தரப்பு பிரச்சார கட்சி அலுவலகங்கள் தாக்கப்பட்டு, அழிக்கப்பட்டன. 'எதிர்த்தரப்பு அலுவலகங்கள் தீயிட்டு கொழுத்தப்பட்டதுடன், துப்பாக்கிகளை ஏந்தியவண்ணம் கோஷ்டிகள் நடமாடுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது" என CaFFE என்ற தேர்தல் கண்காணிப்பு உறுப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.கீர்த்தி தென்னக்கோன் ஊடகங்களுக்கு தெரிவித்தார். சில அரசியல் கட்சிகளினால் சார்த்துரைக்கப்பட்டவாறு இரவு நேரத்தில் அலைந்து திரியும் ஆயுதபாணியிலான குழுவொன்றினால் கெடுபிடிநிலை அதிகரித்திருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.), ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) மற்றும் ஜனநாயகக் கட்சி (ஜ.க.) ஆகியவற்றுக்குச் சொந்தமான ஒரு தொகையிலான எதிர்த்தரப்பு அரசியல் கட்சி அலுவலகங்களை சேதமாக்குவதற்கு



டசின் கணக்கான ஜே.வி.பி. பிரச்சார அலுவலகங்கள் தாக்கப்பட்டு, அழிக்கப்பட்டன (Photo: Lanka Truth)

இக்குழு பொறுப்பாக இருந்ததாகச் சார்த்துரைக்கப்பட்டுள்ளது. ஜே.வி.பி.இன் கூற்றுப்படி அவர்களின் 30 கடசி அலுவலகங்கள் தாக்கப்பட்டன (செப்ரெம்பர் 12இன் உள்ளவாறு). 'இத்தகைய தாக்குதல்களுக்கு அரசாங்க அதிகாரம் நேரடியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. துப்பாக்கி சூடு நடத்தப்பட்ட நான்கு தருணங்கள் இருந்தன. எனினும், ஒருவரும் கைது செய்யப்படவில்லை" என ஜே.வி.பி. கூறியிருந்தது. 'மொனராகலை மாவட்டத்தில் ஆளும் ஐக்கிய பொதுசன சுதந்திரக் கூட்டணிக்காக (ஐ.பொ.சு.கூ.) 219 தேர்தல் அலுவலகங்களைச் செயற்படுத்துவதற்கு தேர்தல் திணைக்களம் அனுமதியளித்துள்ளது. ஆனால், கட்சியானது 970க்கு மேற்பட்ட தேர்தல் அலுவலகங்களைப் பராமரிக்கின்றது. இவற்றில் பெரும்பாலானவை பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட வெறும் தற்காலிகமான கட்டமைப்புகளாகும். ஆனால், தொடர்ச்சியான தாக்குதல்களின் காரணமாக, அங்கீகரிக்கப்பட்ட அலுவலகங்களின் எண்ணிக்கையைக் கூட ஐ.தே.க.வும், ஜே.வி.பி.யும் பராமரிக்கவில்லை. இந்த எண்ணிக்கை ஐ.தே.க.வுக்கு 163 என்பதுடன், ஜே.வி.பி.க்கு 73 ஆகும்.

http://www.colombopage.com/archive_14B/Sep08_1410153162CH.php (2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)
http://news.xinhuanet.com/english/world/2014-08/27/c_133590700.htm (2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)
http://cmev.wordpress.com/ (2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)
http://www.lankatruth.com/home/index.php?option=com_content&view=article&id=7591:president-is-the-biggest-obstacle-for-free-and-fair-election--jvp-&catid=36:top-stories&Itemid=124 (2014 செப்ரெம்பர் 14 அன்று கடைசியாக அணுகப்பட்டது)